**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 09/2021**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | கார்த்திகேயன் (PW3) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது வடுகனூரில் குடியிருந்து கொண்டு கடலைமிட்டாய் கம்பெனி வைத்துள்ளேன். அ.சா.1 சண்முகம் என்பவரை எனக்கு தெரியும். ஆஜரில் உள்ள எதிரியையும் எனக்கு தெரியும். 2020ம் வருடம் நான் நடுப்பாளையத்தில் உள்ள எனது அண்ணன் சாட்சி சக்திவேல் பேக்கரியில் வேலை செய்துவந்தேன். 22.10.2020ம் தேதியன்று நானும் எனது அண்ணன் சக்திவேலும் பேக்கரி பொருட்களை எடுத்துகொண்டு கடைக்கு சென்றோம். வேலப்பம்பாளையத்தில் கூட்டமாக இருந்தது. அ.சா.1 சண்முகத்தை யாரேனும் வழிமறித்து தகராறு செய்தார்களா என்றோ அவரை அடித்து காயப்படுத்தினார்களா என்றோ எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 22.10.2020ம் தேதியன்று மாலை 04.45 மணிக்கு நானும்எ னது அண்ணன் சாட்சி சக்திவேலும் வேலப்பம்பாளையத்தில் உள்ள ரோட்டில் சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரி பழனிச்சாமி அ.சா.1சண்முகத்தை தடுத்து நிறுத்தி தகாத வார்த்தைகளால் திட்டியதையும், ஒரு செம்மந்தடியால் சண்முகத்தின் காலில் அடித்து காயப்படுத்தியதையும், கொலை மிரட்டல் செய்ததையும் நான் நேரில் பார்த்ததாக சொன்னால் சரியல்ல. தற்போது எதிரி கேட்டுகொண்டதால் உண்மையை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.24 08:59:04 +0530

மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.24 08:59:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 09/2021**
**Prosecution Witness**:4

| Name | சக்திவேல் (PW4) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து கொண்டு பேக்கரி கடை வைத்துள்ளேன். அ.சா.1 சண்முகம் என்பவரை எனக்கு தெரியும். ஆஜரில் உள்ள எதிரியையும் எனக்கு தெரியும். 2020ம் வருடம் நான் நடுப்பாளையத்தில் பேக்கரி கடை வைத்து வேலை செய்து வந்தேன். 22.10.2020ம் தேதியன்று நானும் எனது தம்பி கார்த்திகேயனும் பேக்கரி பொருட்களை எடுத்துகொண்டு கடைக்கு சென்றோம். வேலப்பம்பாளையத்தில் கூட்டமாக இருந்தது. அ.சா.1 சண்முகத்தை யாரேனும் வழிமறித்து தகராறு செய்தார்களா என்றோ அவரை அடித்து காயப்படுத்தினார்களா என்றோ எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 22.10.2020ம் தேதியன்று மாலை 04.45 மணிக்கு நானும்எ னது அண்ணன் சாட்சி சக்திவேலும் வேலப்பம்பாளையத்தில் உள்ள ரோட்டில் சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரி பழனிச்சாமி அ.சா.1சண்முகத்தை தடுத்து நிறுத்தி தகாத வார்த்தைகளால் திட்டியதையும், ஒரு செம்மந்தடியால் சண்முகத்தின் காலில் அடித்து காயப்படுத்தியதையும், கொலை மிரட்டல் செய்ததையும் நான் நேரில் பார்த்ததாக சொன்னால் சரியல்ல. தற்போது எதிரி கேட்டுகொண்டதால் உண்மையை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.24 08:59:24 +0530

மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.24 08:59:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.